**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**மேட்டுர்,**

**தேதி: 18.11.2025**

**OS. No. 182/2022**

**வழக்கு சாட்சி PW.1–சாந்தி, க/பெ.ரத்தினவேல்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

1) தாவா சொத்தில் என் தாத்தா தலைமுறை முதல் நாங்கள் அனுபவத்தில் உள்ளோம், பிரதிவாதிகள் எங்களை வெளியேற்ற பார்த்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். நாங்கள் எந்த நிலத்தில் அனுபவத்தில் உள்ளோம் என்றால் ச.எண்.251ல் 2.5 ஏக்கர் நிலத்தில் அனுபவத்தில் உள்ளோம். தாவா சொத்து என்ன வகைபாடு கொண்ட நிலம் என்றால் தரிசு புறம்போக்கு என்று உள்ளது. தாவா நிலமானது மேடு, பள்ளமாக எந்தவித விவசாயமும் செய்யாமல் தரிசாக உள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் 100 வருடங்களாக அனுபவம் செய்து வந்து தண்ட தீர்வை செலுத்தி வருவதை நிரூபிக்கும் வகையில் ஏதேனும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தீர்வை செலுத்தியதற்கான ரசீதை தாக்கல் செய்துள்ளேன்.

2) வா.சா.ஆ.3 அ–பதிவேட்டில் தாவா ொசத்து அரசுக்கு சொந்தமான புஞ்சை நிலம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் 100 வருடங்களாக நாங்கள் அனுபவத்தில் உள்ளதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாததால் எதிரிடை பாத்தியம் மூலம் பாத்தியப்பட்டது என்று எங்களால் கேட்க இயலாது என்றால் சரியல்ல. எந்த ஆவணங்களையும் எங்கள் வழக்கை நிரூபிப்பதற்கு நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும், முன்னுக்கு பின் முரணாக வழக்கில் சங்கதிகளை சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. அரசின் கொள்கை முடிவுகளை இவ்வாறு தான் செய்யவேண்டும் என்று நாங்கள் எந்த வித நிர்பந்தமும் செய்ய இயலாது என்றால் சரியல்ல.

3) 29.03.2023ல் பிரதிவாதிகளின் உதவியாளர்கள் யார் யார் வந்து எங்களை வெளியேற்ற பார்த்தார்கள் என்று அவர்கள் பெயர்களை எதுவும் நான் வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் தான் வந்தார்கள். அவ்வாறு வந்திருந்தால் அவர்களது பெயர் மற்றும் என்ன பணி

செய்கிறார்கள் என்று வழக்கில் குறிப்பிட்டிருப்போம் என்றும் தற்போது வழக்கிற்காக சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் என் குடும்பத்தாருக்கும் தாவா சொத்து அமைந்துள்ள கிராமத்தில் வேறு நிலம் உள்ளதா என்றால் இல்லை. வேறு ஏதேனும் கிராமங்களில் நிலம் உள்ளதா என்றால் இல்லை. நான் இதற்கு முன்பு வருவாய் நிலை ஆணை படி வட்டாட்சியர் மற்றும் வருவாய் துறையினரிடம் ஏதேனும் மனு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

4) நிலம் சம்மந்தமான பிரச்சனைகள் பொருத்தவரை முதலில் வட்டாட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்துவிட்டு, அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை எனில் மேல்முறையீட்டு அலுவலரிடம் மனு கொடுத்துவிட்டு, அவரும் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய இயலும் என்றும், நான் நேரடியாக இந்த வழக்கை தாக்கல் செய்ததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கை விசாரிக்க நீதிமன்றத்திற்கு வருவாய் நிலை ஆணைப்படி அதிகாரம் இல்லை என்றும், வருவாய் துறையினரிடம் தான் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றால் சரியல்ல. அரசுக்கு சொந்தமான சொத்தை பொறுத்து நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம் என்று சொல்வதே தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கானது பிரதிவாதிகளுக்கு ஆதரவாக அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து அரசுக்கு பாத்தியப்பட்ட நிலம் என்பதால் பொது மக்கள் பயன்பாட்டிற்கும் அவர்கள் மேம்பாட்டிற்கும் தேவைப்படும் பட்சத்தில் அரசு அதை எடுத்துகொள்ள முழு உரிமையும் உள்ளது என்றால் சரியல்ல.

ஓம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.